**செப்டம்பர் - 10**

# TNPSC துளிகள்

- இந்திய உச்ச நீதிமன்றமானது தில்லியில் 140 கிலோ மீட்டர் நீளத்திற்கு இரயில் பாதைகளின் ஓரமாக இருக்கும் 48,000 சேரிக் குடிசைகளை அகற்ற அறிவுறுத்தியுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் 1939 மீதான அவசரச் சட்டம்

- தமிழ்நாடு மாநில ஆளுநரான பன்வாரி லால் புரோகித் அவர்கள் தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம், 1939 (2வது திருத்தம்) என்ற சட்டத்தின் மீதான அவசரச் சட்டம், 2020 என்ற ஒரு சட்டத்தைப் பிரகடனப் படுத்தியுள்ளார்.
- இது கோவிட் - 19 நோய்த் தொற்று காரணமான பொது முடக்கம் மற்றும் சமூக இடைவெளி விதிகளின் விதிமீறல்களை "கூட்டுக் குற்றமாக" ஆக்கியுள்ளது.
- இது இந்த நடவடிக்கைகளைச் செயல்படுத்தும் நபர்களுக்கு எதிரான வன்முறை சார்ந்த செயல்பாடுகளைத் தடை செய்கின்றது.
- இந்த அவசரச் சட்டமானது வணிக அமைப்புகள் மற்றும் இதர பொது இடங்களுக்காக வழங்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டுதல் நெறிமுறைகளை மீறுபவர்களுக்கு அபராதமாக ரூ.5,000 விதிக்க வழிவகை செய்கின்றது.
- பொது இடங்களில் முகக் கவசம் அணியாதவர்களுக்கு ரூ.200 அபராதமாக விதிக்கப் படவுள்ளது.
- பொது இடங்களில் எச்சில் உமிழ்பவர்கள் மற்றும் சமூக இடைவெளியை மீறுபவர்களுக்கு ரூ.500 அபராதமாக விதிக்கப் படவுள்ளது.
- தனிமைப்படுத்தல் விதிகளை மீறுபவர்களுக்கு ரூ.500 அபராதமாக விதிக்கப் படவுள்ளது.

# தேசியச் செய்திகள்

## பிச்சை எடுத்தலை குற்றமற்றதாக ஆக்குதல்

- மத்திய இரயில்வே துறை அமைச்சகமானது இரயில்கள் மற்றும் இரயில்வே நிலையங்களில் பிச்சை எடுத்தலை குற்றமற்றதாக மாற்றுவதற்குப் பரிந்துரை செய்துள்ளது.
- இது இரயில்வே சட்டம், 1989 என்ற சட்டத்தின் விதிமுறைகளின் கீழ்

மேற்கூறியவற்றைக் குற்றமற்றதாக மாற்றுதல் அல்லது அபராதங்களைக் குறைத்தல் ஆகியவற்றுக்கான ஒரு நடவடிக்கையின் பகுதியாகும்.

- மேலும் இது புகைப்பிடித்தலைக் கண்டவுடன் அதே இடத்தில் புகைப்பிடிப்பவர் மீது அபராதம் விதிக்க வழிவகை செய்கின்றது.

## ஒரே பாரதம் உன்னத பாரதம் திட்டம் - 2020

- ஒரே பாரதம் உன்னத பாரதம் என்ற திட்டத்தின் கீழ் கோவா மாநிலமானது ஜார்க்கண்ட் மாநிலத்துடன் இணைந்துள்ளது.
- பொது முடக்கத்தின் காரணமாக இந்தத் திட்டத்தின் தீவிரமானது குறைந்துள்ளது. எனவே தற்பொழுது காணொலி வாயிலான நிகழ்வுகள் மீது கவனம் செலுத்தப் படுகின்றது.
- இதற்கு முன்பு கோவாவின் பனாஜியில் நடத்தப்பட்ட லோகோ உட்சவம் ஆனது சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளது.
- இந்தத் திட்டமானது 2015 ஆம் ஆண்டில் சர்தார் வல்லபாய் படேலின் நினைவு தினத்தின் போது இந்தியப் பிரதமரால் அறிவிக்கப்பட்டது.

## உயர்நீதிமன்ற நீதிபதி நீதிமன்ற வழக்கிலிருந்து விலகல்

**INSTANCE OF RECUSAL OF SC JUDGES**

**March 8, 2016:** Justice J Chelameswar recused from a case pertaining to Bangalore blasts accused Abdul Nazir Maudany

**March 9, 2016:** Justice AR Dave's bench said it was unable to hear activist Teesta's anticipatory bail plea and referred it to CJI for listing it before another bench

**March 10, 2016:** Justice VG Gowda recused from hearing CBI's plea challenging May 2010 Allahabad HC verdict dropping criminal conspiracy charge against BJP leaders LK Advani in Babri Masjid case

**April 28, 2011:** Justices DK Jain and HL Dattu recused from hearing then Sikkim HC Chief Justice PD Dinakaran's petition seeking a stay on Rajya Sabha-appointed inquiry panel against him

**March 2, 2012:** Bench of justices HL Dattu and CK Prasad chose not to hear a petition challenging validity of the USD 8.5 million Cairn Energy-Vedanta deal.

- பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநில உயர்நீதிமன்றத்தின் நீதிபதியான சுவிர் சேகல் என்பவர் பல்வந்த் சிங் முல்தானி என்பவர் காணாமல் போனதாகவும் மற்றும் அவர் கொலை செய்யப் பட்டதாகவும் கூறப்படும் வழக்கில் பஞ்சாப் மாநிலத்தின் முன்னாள் டிஜிபியான சுதேத் சிங் சைனி என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட முன் ஜாமீன் மனு வழக்கு மீதான விசாரணையிலிருந்து விலகியுள்ளார்.
- இந்த வழக்கிலிருந்துத் தன்னை விடுவித்துக் கொண்ட அந்த நீதிபதி, இந்த வழக்கை மீண்டும் பட்டியலிடுவதற்கு அம்மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு இந்த விவகாரத்தை அனுப்பியுள்ளார்.

- வழக்கிலிருந்து விலகுதல் எனப்படும் நீதித்துறைத் தகுதியிழப்பானது வழக்கை விசாரித்தல் அல்லது நிர்வாக அதிகாரியாக கருத்து வேற்றுமையின் காரணமாக சட்ட நடைமுறைகள் போன்ற அலுவல்பூர்வ நடவடிக்கைகளில் பங்கேற்பதிலிருந்து விலகிக் கொள்வதைக் குறிக்கின்றது.
- நீதிபதிகள் வழக்கிலிருந்து விலகுவதற்கு எந்தவொரு வரையறையும் தற்பொழுது வரை விதிக்கப்படவில்லை.


# சர்வதேசச் செய்திகள்

## 3வது அமெரிக்க - இந்திய உத்திசார் பங்காளர் மன்ற (USISPF) மாநாடு

- இது ”அமெரிக்க-இந்தியப் பயணத்தின் புதிய சவால்கள்” என்ற கருத்துருவுடன் 5 நாட்கள் நடத்தப்படும் ஒரு மாநாடாகும்.
- USISPF (US India Strategic Partnership Forum) என்பது ஓர் இலாப நோக்கற்ற அமைப்பு ஆகும்.
- இது இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றிற்கிடையே நட்பை ஏற்படுத்துவதற்காகப் பணியாற்றுகின்றது. இது 2017 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
- USISPF ஆனது கொள்கைக் கருத்தாக்கத்தின் மூலம் இந்த 2 நாடுகளுக்கிடையே வலுவான மற்றும் மாறி வரும் உறவை உருவாக்கும் ஒரு முக்கியமான பணியில் ஈடுபட்டு வருகின்றது.

## கிரீஸ் மற்றும் துருக்கி ஆகியவற்றிற்கிடையேயான அமைதிப் பேச்சுவார்த்தை

- துருக்கியானது மத்தியத் தரைக் கடலின் இயற்கை வளங்கள் குறித்து கிரீஸ் நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ளதாக அறிவித்துள்ளது.
- இது இந்த 2 நாடுகளுக்கிடையே நீண்ட காலமாக நீடித்து வரும் கிழக்கு மத்தியத் தரைக்கடலில் உள்ள இயற்கை வளங்களின் நியாயமான பகிர்விற்கு வழிவகுக்கும்.
- துருக்கி மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகள் கிழக்கு மத்தியத் தரைக்கடலில் 2 நாடுகளுடனும் ஒன்றிப் பொருந்தும் வகையில் கடல்சார் உரிமைகளைக் கொண்டு உள்ளன.
- இந்தக் கடல்சார் பிரச்சினையானது பிராந்திய நீர், கண்டத் திட்டு மற்றும் ஏஜியன் கடலில் அவர்களது பகுதி உள்ளிட்ட கடல்சார் வரம்பு எல்லைகள் தொடர்பானதாகும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## எடுத்துச் செல்லக்கூடிய ஒளியியல் குழி நுண்ணுயிரி நீக்க அலகு

- விஞ்ஞானிகள் கலப்பு நுண்ணுயிரி நீக்க முறை (hybrid sterilization system) எனப்படும் ஒரு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எடுத்துச் செல்லக் கூடிய நுண்ணுயிரி நீக்க அலகை மேம்படுத்தியுள்ளனர்.
- இது கோவிட் - 19 நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான தனிநபர் பாதுகாப்பு உபகரணத்தை (PPE - Personal protective equipment) கிருமி நீக்கம் செய்யும் திறன் கொண்டது. இது எளிதாக மற்றும் விரைவாக கிருமி நீக்கம் செய்யப்பட்டு, பலமுறை அவற்றைப் பயன்படுத்த முடியும்.
- இது PPEகளிலிருந்து வரும் தீங்கு விளைவிக்கும் திடக் கழிவு உற்பத்தியைத் தடுக்கும் திறன் கொண்டது.

## சக்கர் டிகோவ் சாதனம்

- ஐஐடி-தில்லியினால் ஆதரிக்கப்படும் சக்கர் புத்தாக்க நிறுவனம் என்ற ஒரு ஸ்டார்ட் அப் நிறுவனம் “சக்கர் டிகோவ்” என்ற ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளது.
- இது என்95 முகக் கவசங்களில் உள்ள கிருமிகளை நீக்கும் நுண்ணுயிரி நீக்க சாதனமாகும்.
- என்95 முகக் கவசங்களில் உள்ள துளைகளைத் தூய்மைப்படுத்துவதற்காக அதிக

அளவு ஓசோன் வாயுவை செலுத்தும் செயல்முறையானது பயன்படுத்தப் படுகின்றது.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஜம்மு காஷ்மீர் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம்

- சமீபத்தில் ஜம்மு காஷ்மீர் அரசானது 10 உறுப்பினர்களைக் கொண்ட பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்தை அமைத்துள்ளது.
- இது 5 பதவி வழி உறுப்பினர்கள் மற்றும் 5 அலுவல் சாராத உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- இந்த ஆணையமானது உள்ளாட்சி அமைப்பைச் சார்ந்த பிரதிநிதிகளின் உதவியுடன் மக்கள் பல்லுயிர்ப் பெருக்கப் பதிவேட்டைப் பராமரிக்கின்றது.
- இந்தப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையமானது பொது நிர்வாகத் துறையினால் வழங்கப் பட்டுள்ள ஆணையின்படி, தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்துடன் இணைந்து ஆலோசனை அடிப்படையில் செயல்படவுள்ளது.
- பல்லுயிர்ப் பெருக்க ஆணையத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வரும் 3 நிலைகளில் பல்லுயிர்ப் பெருக்கக் குழுக்களினால் கண்காணிக்கப் படவுள்ளன.
    - தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம்
    - ஜம்மு காஷ்மீர் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம்
    - பஞ்சாயத்து மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்

## காசிரங்கா தேசியப் பூங்காவின் விரிவாக்கம்

- அசாம் மாநில அரசானது 3053 ஹெக்டேர் என்ற அளவில் காசிரங்கா தேசியப் பூங்காவை விரிவாக்கம் செய்வதற்குத் தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- இது பிரம்மபுத்திரா நதி முழுவதும் ஓரங் மற்றும் நாமேரி தேசியப் பூங்காக்களிடையே இணைப்பை ஏற்படுத்த உதவ இருக்கின்றது.
- மேலும் இது கர்பி அங்லாங் மலைப் பகுதியிலிருந்து பூங்காவின் தெற்குப் பகுதியையும் இணைக்க இருக்கின்றது.
- இது மனித-வன விலங்கு ஆகியவற்றிற்கு இடையிலான எதிர்மறையான இடையீடுகளைக் குறைக்க இருக்கின்றது.




# மாநிலச் செய்திகள்

## மாநிலத்தின் பாரம்பரியத் தளங்களைப் பாதுகாப்பதற்கான மசோதா

- அசாம் மாநில சட்டமன்றமானது மோரான், மோடோக் மற்றும் கம்டாபூர் ஆகிய தன்னாட்சி மன்றங்களை உள்ளடக்கியுள்ள 3 தன்னாட்சி ஆணையங்களை அமைப்பதற்கான மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- இந்தப் பரிந்துரைகளானது குடியுரிமைத் திருத்தச் சட்டப் போராட்டத்திற்குப் பிறகு அரசினால் வழங்கப் பட்டுள்ளது.
- இந்த மசோதாவானது அசாம் பிரகடனத்தின் 6 ஆம் பிரிவை செயல்படுத்துவதற்கான ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நடவடிக்கையாகக் குறிப்பிடப் படுகின்றது.

*பிரிவு 6*

- அசாம் மக்களின் கலாச்சாரம், சமூகம் மற்றும் மொழியியல் அடையாளம், பாரம்பரியத்தைப் பாதுகாத்து ஊக்கப்படுத்துவதற்காக வேண்டி தேவைப்படும் நடவடிக்கைகளை எடுக்கவும், அரசியலமைப்பு, சட்டமன்ற மற்றும் நிர்வாகப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாநில அரசிற்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது.


1985
Assam Accord
2016
Citizenship (Amendment) Bill
Foreign nationals coming into Assam after March 24, 1971, will be detected and deported
Foreign nationals coming into Assam between January 1, 1966, and March 24, 1971, are to be detected and debarred from voting for 10 years
Illegal Hindu, Sikh, Buddhist, Jain, Parsi and Christian migrants from Afghanistan, Bangladesh and Pakistan become eligible for citizenship
Relaxes existing norms for Indian citizenship by naturalisation for these six minorities belonging to the three countries
Points of Contention
For the first time, religious considerations will decide the granting of Indian citizenship
It violates Assam Accord, 1985, that considers all foreign nationals entering Assam after March 24, 1971 as illegal